# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2010
ஐப்பசி 7
துல்ஹஃதா 2
புதன் (24-10-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 41
விலை சதம் 50


## "சன்சோனிக்கு மிரட்டல் கடிதம் அனுப்பியதும் ஜூரர்கள் வீட்டுக்கு கல்லெறிந்ததும் யார்? சபையில் கூட்டணியினர் அம்பலப்படுத்தினர்!"

# மத்தியூவின் குற்றச்சாட்டுகளுக்கு அமிர், சிவா சுடச்சுடப் பதில்!

அவசரகாலச் சட்டத்தையொட்டிய விவாதத்தின்போது, பாராளுமன்றத்தில் பேசிய கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் சிறில் மத்தியூவின் ஒவ்வொரு வாதத்துக்கும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், நல்லூர் பா. உ, திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் சுடச்சுடப் பதிலடி கொடுத்தனர். அவற்றை பாராளுமன்ற ஹன்சார்ட் (4.10.79) தொகுதி 6— இலக்கம் 7-இல் லிருந்து அப்படியே கீழே தருகிறோம்.

சிறில்மத்தியூ: தேர்தல் நாளான 20-5-79 அன்று ஆள்மாறாட்டம் செய்தஇருவரை பொலிசாரிடம் விசாரணைக்கு ஒப்படைக்காமல் அவர்களை விடுதலைசெய்யும் படிதிரு அமிர்தலிங்கம்தேர்தல் அதிகாரிக்குஉத்தரவிட்டார்,

அமிர்தலிங்கம், இதுஎன்னைப்பற்றிய தனிப்பட்ட குறிப்பாக இருக்கிறது, இது முழுக்க முழுக்க பொய்.

சபாநாயகர்: கௌரவ அமைச்சர் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்,

மத்தியூ! கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது ஐக்கிய தேசியக்கட்சிக்கு. உண்மையில்தேர்தல்ஏஜண்டுகள் இருக்கவில்லை, இதற்குக்காரணம் எமக்கு ஆதரவாளர்கள் இல்லாதது அல்ல— தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டிலிருக்கும் பயங்கரவாத இயக்கத்தின் பயங்கரவாத ஆட்சியே இதற்குக் காரணம்.

அமிர்தலிங்கம்; அதுதவறுனது,

மத்தியூ, என்னைப் பொறுத்தவரை அதுசரியானதே நான் அதை நிருபிப்பேன்.

கே, துரைரத்தினம்! 20 வருடங்களுக்குமுன்பு கூறிய அதே பழங்கதையையே கூறுகிறீர்,

மத்தியூ: அதே கதையும் அதே பயங்கரவாத நடவடிக்கைகளுமே இன்னும் தொடர்கின்றன.

அமிர்தலிங்கம்; அதே பழைய கிராமபோன்றெக்கோட்

எம். சிவா: கீறல்விழுந்த கிராமபோன்றெக்கோட்;

மத்தியூ, எத்தனைபொலிசார் பொலிசுக்குக் தகவல் கொடுத்தவர்கள் அரசியல் வாதிகள் கொலைசெய்யப் பட்டார்கள் என்பதை மறந்துவிட்டீர்கள்.

எம், சிவா: பொலிசாரால் கொலை செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதை நாம் உமக்குக் கூறுகிறோம்.

மத்தியூ: பயங்கரவாதம் வடக்கே ஆட்சிபுரிந்ததுஅதனுல் தேர்தல் ஏஜண்டுகளாகப் பணியாற்ற யாரும்முன் வரவில்லை— ஆள்மாறுட்டம் பெருந் தொகையாக இடம்பெற்றது;

எம், சிவா, பொலிஸ் என்ன செய்து கொண்டிருந்தது?

மத்தியூ, இப்பொழுது யாழ்ப்பாணத்தில் மக்கள் அச்சமின்றி நடமாட முடிகிறது பயங்கரவாதிகள் இந்தியாவில் இப்போது மறைந்திருக்கிருர்கள், இந்தப்பட்டியலில் ஆக ..........."

அமிர், பட்டியலின் ஒரு பகுதி!

மத்தியூ: ஆம் கூட்டணியினர் ஏற்பாடு செய்த கொலைகளின் பட்டியலின் ஒரு பகுதி.

அமிர்; இவை உங்கள் கையாட்களாலேயே செய்யப்பட்டன!

(சிறில் மத்தியூ தொடர்ந்து பட்டியலைப்படிக்கிருர்)

பிரேமதாசா: இது றெக்கோட்டின் மற்றப்பக்கம்

எம், சிவா, இது 1970ம் ஆண்டு றெக்கோர்ட் நாம் இங்கு ஒலிபரப்புவது1979ம் ஆண்டு றெக்கோர்ட்,

சிறில்மத்தியூ, கௌரவ சபாநாயகர் (அல்ஹாஜ் எம்.ஏ, பாக்கீர் மாக்கார்) அவர்களுக்கு மக்கொன்னையை சேர்ந்த எம்;எல்.வி, டீசில்வா எழுதியிருந்த கடிதம் ஒன்றை இங்கு வாசிக்கிறேன்.

வாழைச்சேனைப் பகுதியில் தமிழ் வகுப்புவாதிகளின் துன்புறுத்தல்

"மட்டக்களப்பு மாஜிஸ்ரேட் நீதிமன்றத்திலிருந்து அனுராதபுர சிறைச்சாலைக்கு அழைத்துச்செல்லப் படும் வழியில் புகையிரதத்திலிருந்து குதித்து சிறைக் காவலாளிகளிட மிருந்துதப்பியோடிவிட்டகந்தப்போடி என்னும் ஒருவன் இப்போது கதிரவெளியில்வாழுகிருன். தேடப்படும் ஏனைய குற்றவாளிகளான இராசநாயகம் இராசரத்தினம் வேல்முருகு குணபாலன்ஆகியோருடன் கட்டுமுறிப்புத் திட்டத்துடன் இணைந்துள்ள களனியாமடு கொலனியில் இவனும் வாழுகிருன்"

அமிர்: இன வெறியைத் தூண்டிவிட இப்போது நீர் முயற்சிக்கிறீர்.

மத்தியூ: "இவர்களுக்கு அவர்களது உறவினர்களும் ஏனைய தமிழர்களும் உதவி செய்கின்றனர். அவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் கதிரவெளி வாழைச்சேனை வாகரை பனிச்சங்கேணி போன்ற பகுதிகளை கலக்கி வருகின்றனர். இவர்களைப் பிடிப்பதற்குபொலிசாருக்கு உதவி செய்த எங்களுக்கு பயமுறுத்தல் கடிதம் வருகிறது. இதன் காரணமாக 40 ஆண்டுகளாக இங்கு வாழ்ந்துவரும் நாம் இப்போது இந்த ஊரைவிட்டுஇனவாத பயங்கரவாதிகளுக்குப் பயந்து வெளியேற வேண்டியவர்களாக இருக்கிறோம் பலகுடும்பங்கள் பேருவளைக்கு வந்துவிட்டன-எம்மைப் பாதுகாக்க நடவடிக்கை யெடுங்கள் இந்த நிலைமையை நீடிக்கவிட்டால் வெகு விரைவில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களவர்கள் பேரழிவை சந்திக்க நேரிடும்"

தர்மலிங்கம், கல்குடாவிலும்அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்துங்கள்,

சிறில்மத்தியூ: கூட்டணியைச் சேர்ந்த முன்னுள் மூதூர்பா, உ,வான திரு. தங்கத்துரை கந்தப்போடியை உபயோகித்து சிங்களவர்களுக்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கையிலீடுபட்டுள்ளார் கந்தப்போடி கிளிவெட்டி — சேருவில பகுதியில் குறைந்தது ஆறு சிங்களவரையாவது கொன்றிருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப் படுகிறது, (குறுக்கீடுகள்) தங்கத்துரை

—4-ம் பக்கம் பார்க்க



**இன்று ஐக்கிய நாடுகள் தினம். ஐக்கிய நாடுகள் சபையில் திரு. வைகுந்தவாசன் மூலமாக ஈழத் தமிழர் விடுதலைக் குரல் எழுப்பப்பட்ட அந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க சம்பவத்தை இந்நாளில் நினைவு கூர்ந்து புதிய தெம்பு பெறுவோம்.**

## யாழ்நகரில் இன்று ஐ.நா. தின விழா

யாழ் மாநகர மண்டபத்தில் இன்று 24-10-79 புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு முதல்வர் திரு, இராசா விசுவநாதன் தலைமையில் ஐ. நா. தினவிழா நடைபெறுகிறது. விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம், பா. உ. சி. கதிரவேற்பிள்ளை பா. உ, க. துரைரத்தினம் பா. உ. வி.என்.நவரத்தினம் பா.உ. வெ. யோகேஸ்வரன் பா.உ கே. நேசையா, பண்டிதர் இரத்தினம் பா. உ. வீ. ஆனந்தசங்கரி பா. உ. திரு. சிலன் கதிர்காமர் ஆகியோர் பேசுகிருர்கள்.

# 279 வாக்குகள் பெற்றுத் தோல்வியுற்றவரை யாழ் அரச அதிபராக ஏன் நியமித்தீர்கள்?

**அவசரகாலச் சட்ட விவாதத்தின்போது பாராளுமன்றத்தில் 4.10.79ல் காவலூர் பா. உ. பண்டிதர் இரத்தினம் ஆற்றிய உரை இங்கு முழுமையாக இடம்பெறுகிறது. (பாராளுமன்ற ஹன்சார்ட்: தொகுதி 6. இலக்கம் 7, பந்திகள் 954 முதல் 962 வரை)**

சபாநாயகர் அவர்களே இப்பொழுது நிகழ்ந்த பேச்சை நாங்கள் கேட்கும் பொழுது கௌரவ கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் திரு, எஸ். டி, பண்டாரநாயக்கா அவர்கள் கூறியது போல சிறுபான்மையினருடையபிரச்சினையைஇந்தஅரசாங்கம் உண்மையாகத் தீர்க்குமா என்ற கேள்விதான் எழுகிறது இப்படித்தான் முன்னைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலும் அமைச்சர் குமாரசூரியர் இருந்துகொண்டு பிரதம அமைச்சருக்கும் ஏனையோருக்கும் நாங்கள் தமிழரசுக் கட்சியை உடைத்துவிட்டோம்தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு இனி யாழ்ப்பாணத்தில் செல்வாக்கு இல்லை. நாங்கள் காங்கேசன்துறைத் தேர்தலை வென்றுவிடுவோம்என்றெல்லாம் கூறினார், அதை நம்பிஏமாந்ததுஅந்த அரசாங்கம் அவருடைய இடத்தில் யாழ்ப்பாணத்திலே வேறு யாரும் உங்களுக்குக்கிடைக்காதபடியால் அரசாங்கஅதிபராக ஒருவரை அங்கே நியமித்திருக்கிறீர்கள், அவருடைய கருத்தைத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கே செல்வாக்கிழந்துவிட்டது என்ற கருத்தைத் தான் எனக்கு முன் பேசிய பொதுநிர்வாகம்உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் இங்கே கூறினார்; இது ஐக்கிய தேசியக்கட்சியும் முன்னைய அரசாங்கம் கொண்டிருந்த கருத்தைப் போல தமிழர் விடுதலைக் கூட்டணியை நாங்கள்பலமிழகச் செய்தோம் செய்கிறோம் என்று எண்ணி ஏமாறுகிற ஒரு நிலையைத்தான் காட்டுகிறது,

**இதைத் தமிழர்கள்**

**எல்லோரும்**

**எதிர்க்கிறோம்!**

## தமிழருக்கு சிறுமை

ஏனென்றால் அங்கேயிருக்கிற அரசாங்க அதிபரை நியமித்தது ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம் தமிழருக்குச் செய்த மிகவும் சிறுமை விளைவிக்கின்ற செயல் என்பதை நான் முன்னரே சனாதிபதி அவர்களுக்கு அறிவித்திருக்கிறேன்இதுவரையிலே மாவட்ட ஆட்சியிலே தேர்தலிலேதோற்கடிக்கப்பட்ட ஒருவரை அரசாங்க அதிபராக இந்த அரசாங்கமோ அல்லதுமுன்னையஅரசாங்கங்களோ நியமித்திருக்கின்றனவா என்று நான் பிரதி அமைச்சரைக்கேட்கவிரும்புகிறேன். இதுவரையிலே மாவட்ட நிர்வாகத்திலே தேர்தலிலே தோற்கடிக்கப்பட்ட ஒருவரை அரசாங்க அதிபராக எந்த மாவட்டத்துக்கு எந்தக் காலத்திலே நியமித்திருக்கிறீர்கள்? நியமிக்கவில்லை. ஏன் யாழ்ப்பாணத்துக்கு மட்டும் தோற்கடிக்கப்பட்ட ஒருவரைத் தேடி அரசாங்க அதிபராக நியமித்திருக்கிறீர்கள்என்ற ஒரு கேள்விக்கு மறுமொழி சொல்ல நீங்கள் கடமைப் பட்டிருக்கிறீர்கள்;

ஸ்ரீலங்காநிர்வாக சேவையைச் சேராத ஒருவரை முன்னைய வெளிநாட்டுச் சேவையைச் சேர்ந்து ஓய்வு பெற்ற ஒருவரை ஏன் நீங்கள் அரசாங்க அதிபராக உங்களுடைய கையாளாக கைப்பொம்மையாக அங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறீர்கள். இதை நாங்கள் எல்லோரும் தமிழர்கள் எல்லோரும் எதிர்க்கிறோம்.

## பழிவாங்கலா?

சபா நாயகரவர்களே பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலே மக்களுடைய பிரதிநிதி என்ற முறையிலே இந்தச் சபையிலே மக்களுடைய இறைமையை ஒவ்வொருபிரதிநிதியும் எப்படிப் பிரதிபலிக்கிறாரோ அதுபோலவேநாங்களும் மக்களுடைய பிரதிநிதிகளாக சபையிலே அவர்களுடைய இறைமையைப் பிரதிபலிக்கிறோம்: அந்த இறைமையின் பெயரால் கேட்கிறோம் நீங்கள் ஏன் தோற்கடிக்கப்பட்ட ஒருவரை அரசாங்க அதிபராக நியமித்திருக்கிறீர்கள்என்று நாங்கள் அதை எதிர்த்தோம் எதிர்க்கிறோம் எதிர்த்துக் கொண்டே இருப்போம் என்பதை இங்கு சொல்லிவைக்க விரும்புகிறேன்: இது தமிழர்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்துக்குச் செய்யப்பட்ட அவமானம்;

அவர் தேர்தலிலே தோற்கடிக்கப்பட்டது மாத்திரமல்ல 279 வாக்குகள் மாத்திரமே பெற்றார் அவர் என்னோடுதான் போட்டியிட்டார். என்னுடைய ஊரைச் சேர்ந்தவர் என்றும் சொல்லுகிறாராம், எனக்குச் சொந்தக்காரர் என்றும் சொல்லுகிறாராம் 279 வாக்குகள் பெற்ற ஒருவரை எந்த ஒரு மாவட்டத்துக்கும் இன்றுவரையும் எந்த அரசாங்கமும் எப்பொழுதாவது எங்காவது அரசாங்க அதிபராக நியமித்திருக்கிறதா? இதுவரை எவரும் செய்யாத ஒரு அநியாயத்தை செய்துவிட்டுயாழ்ப்பாண மக்களைப் பழிவாங்க இந்த நியமனத்தைச் செய்துவிட்டு யாழ்ப்பாண மக்கள் எங்கள் பக்கம் நிற்பார்கள் எங்களோடு ஒத்தொழுகுவார்கள் என்று நீங்கள் எப்படிஎதிர்பார்க்கமுடியும் என்று கேட்கிறேன்,

## மூன்றாவது அரச அதிபர்

இன்றுவரையும் எத்தனையோ அவசரகாலச் சட்டங்கள் இந்த நாட்டிலே நடைமுறைக்குக் கொண்டு வரப் பட்டிருக்கின்றன. பாராளுமன்றத் தேர்தலிலே தோற்ற ஒருவரை ஒரு தணிக்கை அதிகாரியாக யாராவது நியமித்திருக்கிறார்களா? நீங்கள் யாவரையும் நியமியுங்கள் எங்களுக்கு ஆட்சேபமில்லை. ஆனால் தேர்தலிலே தோற்கடிக்கப்பட்ட ஒருவரை அதுவும் 279 வாக்குகள் பெற்ற ஒருவரை ஏன் நியமிக்க வேண்டும்! இப்படிப்பட்ட ஒருபெரிய அநியாயத்தைச் செய்திருக்கிறீர்கள் என்பதை நான் சனாதிபதிக்குச் சுட்டிக்காட்டியது பலருக்குத் தெரியாது.

தமிழ் மக்களுடைய நல்லெண்ணத்தை நீங்கள்பெற வேண்டுமானால் தமிழ் மக்களுடைய நல்ல கருத்தைநீங்கள் பெற வேண்டுமானால் முதலில் நிர்வாக சேவையைச் சேர்ந்த ஒருவரை அரசாங்க அதிபராக நியமியுங்கள் இதுவரை எங்கள் பகுதியில் அரசாங்க அதிபர்களாக இருந்தவர்கள் சிங்கள மக்கள்தாம் அத்தனை அரசாங்க அதிபர்களோடும் நாங்கள் ஒத்துழைத்திருக்கிறோம். சிங்கள அரசாங்க அதிபர்கள் பெருந்தன்மையோடு நடந்தார்கள். ஒரு அரசாங்க அதிபராவது எங்களுக்குமாறாகநடக்கவில்லை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்றாலும் சரி வேறு எந்தக் கட்சிஎன்றாலும் சரி நியமித்த அரசாங்க அதிபர்களோடு நாங்கள் ஒத்துழைக்க மறுத்தது கிடையாது இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இவர் யாழ்ப்பாணத்துக்கு மூன்றாவது அரசாங்க அதிபர்?

## தணிக்கை

எத்தனை மாவட்டஅமைச்சர்கள் யாழ்ப்பாணத்துக்கு என்று கேட்கிறேன்? யாழ்ப்பாணம் இந்த நாட்டின் ஒரு பகுதி இல்லையா என்றுகேட்கிறேன். இதுவரை இரண்டு மாவட்ட அமைச்சர்களை யாழ்ப்பாணத்துக்குநியமித்திருக்கிறீர்கள் ஒருமாவட்ட அமைச்சரை நியமித்தீர்கள் அவர் போனார் யாரால் போனார்? யாழ்ப்பாணத்திலே என்ன பேசப்படுகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? எனக்கு முன் பேசிய பொது நிர்வாகஉள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் வெளியேபோய் விட்டார் யாழ்ப்பாணத்திலே என்னபேசுகிறார்கள்? முன்னர் நியமிக்கப்பட்ட மாவட்ட அமைச்சரின் செயலாளர் அங்கேபேசினார் என்று சொல்கிறார்கள் சபாநாயகவர்களே மன்னிக்க வேண்டும். யாழ்ப்பாணம் கச்சேரியிலே அவருடைய வாயிலே இருந்து பிறந்ததாகச் சொல்கிறார்கள்.————————————

————————————

————————————

கொடுத்து அவரை உங்களுடைய செல்லப் பிள்ளையாக வைத்துக்கொண்டு கைப்பொம்மையாக வைத்துக் கொண்டு தமிழர்களிடத்தில் எதனை எதிர்பார்க்கிறீர்கள் என்று கேட்கிறேன்,

நீதியின் பெயரால்கேட்கிறேன் யாழ்ப்பாணத்துக்கு ஒரு மாவட்ட அமைச்சரை நியமித்தீர்கள் அவர் நல்ல முறையிலே நிர்வாகத்தை நடத்தினார். நல்ல பல அபிவிருத்தித் திட்டங்களை நடத்த முயன்றார்? அவரை மாற்றினீர்கள் இப்பொழுது வேறு ஒரு மாவட்டஅமைச்சரை நியமித்திருக்கிறீர்கள் நல்லவர் ஆனால். அவர் மாவட்ட அமைச்சரா அல்லது நீங்கள் நியமித்த உங்களுடைய கைப்பொம்மையான அரசாங்க அதிபர் மாவட்ட அமைச்சராஎன்ற கேள்வியைக் கேட்க வேண்டியவர்களாக நாங்களிருக்கிறோம்.

எனவே மாவட்ட அமைச்சர் என்ற அந்தப்போர்வையின் கீழே இன்றைக்கு மாவட்டஅமைச்சரின் காரியங்களைச் செய்து கொள்ள முயலுகின்றவர்— முன்னர் செய்தவர்—அந்தஅரசாங்க அதிபர் என்னோடு போட்டியிட்டு 279 வாக்குகளைப் பெற்றுப்படுதோல்வி அடைந்த அவர்உங்களுக்கு என்ன சொல்லுவார்? இது உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம்! அவருக்கு அங்கே செல்வாக்குஇல்லைஎன்பதை நீங்கள் எல்லோரும் அறியாமலிருப்பதற்காக உணராமல் இருப்பதற்காக அவர் அங்கே தணிக்கை அதிகாரி பத்திரிகைகளிலே என்ன விடுகின்றார்? ஈழநாடுபத்திரிகைகளிலே இருக்கின்ற ஒரு செய்தியை நான் இங்கே வாசித்துக்காட்ட விரும்புகிறேன்.

## ஈழநாட்டுக் கடிதம்

அவர் அரசாங்க அதிபரானவுடன் மூன்று பேர் கையெழுத்திட்டு ஒரு கடிதம் எழுதினார்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலே முன்னணியில் நின்றமூன்றுபேர் ஓர் கடிதம் எழுதினார்கள் இந்த அரசாங்க அதிபரை வரவேற்று 9.8.79ஆம் தேதியஈழநாட்டிலே மக்கள் கருத்து என்ற பகுதியிலே எல்லோருக்கும் நல்லது— திருவாளர்கள் யோகேந்திரா துரைசுவாமிஅவர்களை நியமித்தது எல்லோருக்கும் நல்லது என்று யார் எழுதியிருக்கிறார்கள்; எங்களுடைய யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல இந்த ஈழநாடு பத்திரிகை தணிக்கை அதிகாரியின் சொந்தப் பத்திரிகையாக அவர் குத்தகை எடுத்த பத்திரிகையாக இருக்கிறது அங்கே வேலை செய்கின்றவர்களைக் கேட்டால் நாங்கள் என்ன செய்வது தணிக்கை அதிகாரியைப் பிரீதிப்படுத்தா விட்டால் அவர் தருகின்றசெய்தி

**யாழ் அரச அதிபர்**

**உங்களின் கையாள்;**

**கைப்பொம்மை**

**அவரது நியமனம்**

**யாழ் மாவட்டத்துக்கே**

**பெரும் அவமானம்!**

—3-ம் பக்கம் பார்க்க

# 'ஈழநாடு' இதழில் தணிக்கை செய்யப்பட்ட கடிதம் இதோ!

## தணிக்கை

யைப் போடாவிட்டால் நாங்கள் பத்திரிகையை நடத்த முடியாது என்று சொல்லுகிறார்கள்.

### முன்பு நீலம்; இன்று பச்சை

இந்த ஈழநாட்டுப் பத்திரிகையிலே மக்கள் கருத்து என்ற பகுதியிலே திருவாளர் யோகேந்திரா துரைசுவாமி அவர்களை அரசாங்க அதிபராக நியமித்தது மிகவும் வரவேற்கத்தக்கது என்று கூறப்பட்டிருக்கிறது 28:9.79 ஆம் திகதி மூன்று பேர் கையெழுத்திட்டு ஒரு கடிதம் எழுதினார்கள் என்று நான் முன்னர் சொன்னேன் இதில் கையெழுத்திட்டவர்கள் யாா? இதில் கையெழுத்திட்ட சு. கதிரித்தம்பி என்பவர் சென்ற முறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கிளை ஒன்றின் தலைவர் அவர் ஊர்அறிந்ததலைவர் அதில்கையெழுத்திட்ட அத்தனை பேருமே முன்னர் நீலத்தோடு திரு. குமாரசூரியர் அவர்களுக்குப் பின்னேதிரிந்தவர்கள் இன்று நீலத்தை மாற்றிப் பச்சைச் சட்டை போட்டுக்கொண்டு திருவாளர் யோகேந்திரா துரைசுவாமி அவர்களுக்குப் பின்னால் திரிகிறார்கள் வேண்டுமென்றால்பொலிசு அதிகாரிகளைக் கேட்டுப் பாருங்கள் இந்த சு, கதிரித்தம்பி சென்ற ஆட்சிக்காலத்திலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளையின் தலைவராக இருந்த அவருடைய கடித இதழை நான் உங்களுக்குத்தரவிரும்புகிறேன். அடுத்த ஒரு கிழமைக்குப் பின்னர்இன்னொரு கடிதம் வந்தது அதுவும் மூன்று பேர் எழுதியகடிதம் இந்த அரசாங்க அதிபரைப் பற்றித்தான் எழுதினார்கள் இப்பொழுதாவது உணர்ந்து பாராட்டுங்கள் என்று ஈழநாட்டிலே செய்தி வந்தது.

தலைவரவர்களே உங்களுக்குத் தமிழ் நன்கு தெரியும் அச்செய்தியின் முதல் பந்தியை வாசித்துக் காட்டுகிறேன். அந்த முதல் பந்தியை வாசித்துக் காட்டினால் எப்படித் தனக்குப் பெருமை தேடுகிறார் இந்த அரசாங்க அதிபர் என்பது விளங்கும்,

### கடிதம்

நாட்டின் அபிவிருத்தி வேலைகள்பரவலாக்கப்பட்டு மாவட்ட ரீதியில் சிறப்பாகச் செயற்படுவதற்கென ஒவ்வொரு வட்டத்துக்கும் ஒவ்வொருமாவட்ட அமைச்சரை நியமித்து சிறந்த முறையிலே செயலாற்றிவருவது இன்றையஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம்.

ஏனைய மாவட்டங்கள் போலல்லாது யாழ்ப்பாண மாவட்டத்துக்குப் பல தேவைகள் உண்டுஎன்பதை உணர்ந்து கொண்ட அரசு இப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அமைச்சர் பதவியைஏற்றுக் கொள்ள முன்வராத போது வெளிமாவட்டத்திலே இருந்து ஒருவரை அமைச்சராக நியமித்தது வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை அமைச்சராக நியமித்தபின் யாழ்ப்பாணமாவட்டத்தின் தேவைகளை நன்குணர்ந்த ஒருவரை அரசாங்கம் மாவட்ட அமைச்சின் செயலாளராக நியமித்தது பல உலக நாடுகளிலே இலங்கையின் சார்பில் பணியாற்றி நமது நாட்டுக்குப்பெருமை தேடித்தந்த திரு. யோகேந்திராதுரைசுவாமி சமுதாயத்துக்குப்பணியாற்றஆவல் கொண்டதாலேயே தாம் வகித்த பெரும் பதவியிலிருந்து ஓய்வு பெற்று—(அவர் எப்பொழுதோ ஓய்வு பெற்றுவிட்டார் சபாநாயகரவர்களே பணியாற்றுவதற்காக அவர் இப்பொழுது ஓய்வுபெறவில்லை;) பணியாற்றுவதற்காக ஓய்வு பெற்று 8வருடங்களுக்கு முன்பே பதவியை விட்டுவந்தார், அவர் பதவி ஏற்று மிக்க குறுகிய காலத்திலே யாழ்ப்பாண மாவட்டம் அடைந்த அபிவிருத்தி பாராட்டுக்குரியது அவருடைய திறமைக்கு யாழ்ப்பாண மக்கள் அனைவரும் மதிப்பளிக்க வேண்டியது அவசியம். அண்மையில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் இருந்து மக்கள் அவரைப் பாராட்டி செய்திகள்அனுப்பியதாக பத்திரிகையில் வெளியாகும் செய்திகள் பாராட்டுக்குரியவை ஆகும்;

என்று அவரைப் பற்றி எழுதிவிட்டு

இவர்கள் எல்லோரும்கடந்த தேர்தலுக்கு முன்னரே அவரது அரசியல் சாணக்கியத்தை உணர்ந்திருந்தால் ஊர்காவற்துறைத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக நிச்சயம் அவர் தெரிவு செய்யப்பட்டிருப்பார்;

என்று இப்படி எழுதி இருக்கிறார்கள்,

தெரியாமல் தெரிவு செய்யப்படவில்லை. அவரது அரசியல் சாணக்கியத்தை மாற்றானை மண்டியிடுகின்ற தன்மையை அறிந்திருந்தால் யாழ்ப்பாண மக்கள்அவரை ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்திருப்பார்கள் என்றெல்லாம் இப்படி யார் எழுதுகிறார்கள்? திரு.ந. சிவானந்தம் திரு. ஜே. பாலச்சந்திரன் என்ற இரு இளைஞர்கள் தாம்,

### யார் இவர்கள்?

சபாநாயகர் எப்பொழுது இந்தக் கடிதம் வெளிவந்தது?

திரு: கா.பொ. இரத்தினம்:—

ஈழநாடு பத்திரிகையில் 13.8.79 ஆம் திகதிஇதழில் இக்கடிதம் வெளிவந்தது, இதை எழுதியவர்கள் யார்? தயவுசெய்து இதை நான் மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களது கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன் ஒருவர் ந. சிவானந்தம் வேலணையைச் சேர்ந்தவர் அதாவது எனது ஊரைச் சேர்ந்தவர் மற்றவர் திரு. ஜே. பாலச்சந்திரன் சரவணையைச் சேர்ந்தவர் அதாவது எனது அயல் ஊரைச் சேர்ந்தவர் இந்த இருவரும் இப்பொழுதுயாழ்ப்பாணம் கச்சேரியில் அவரால்தற்காலிகமாகத் தணிக்கையை மேற்பார்வைசெய்யநியமிக்கப்பட்டிருப்பவர்கள் இதை யாரும் மறுக்க முடியாது Iam Challenging anybody to disputethis

நான் குறிப்பிட்ட கடிதத்தில் கையொப்பமிட்ட மூன்றுமவர் திரு எஸ். குகநாதன் என்பவர் ஈழநாடு பத்திரிகையில் வேலை செய்யும் ஒரு உத்தியோகத்தர் அவர் ஒரு உத்தியோகத்தைஇவரிடம் எதிர்பார்க்கிறார். இந்த மூன்று பேரும் சேர்ந்துஎழுதிய கடிதம் இங்கே எழுதப்பட்டது. கச்சேரியில் வைத்து எழுதப்பட்டது, இவரால் தற்காலிகமாக வேலை கொடுக்கப்பட்ட' இரண்டு மூன்று பேர் சேர்ந்து ஒரு கடிதத்தை எழுதி வெளியிட்டால் இவருக்கு யாழ்ப்பாணத்தில் செல்வாக்கு இருக்கிறதென்று யாரும் எண்ணுவார்களா அல்லது நகைப்பார்களா?

### பதில் கடிதம்

இந்தக்கடிதத்தைக்கண்ட எனது தொகுதியில் உள்ள ஒன்பதுபேர் ஆத்திரம் அடைந்தார்கள் இதுஎன்ன? இவரை நாங்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்ய முடியுமா? இவர் இப்பொழுது என்ன நிலையில்இருக்கிறார்? இவரை ஒரு கைப்பொம்மையாக வல்லவா நாம் கருதுகிறோம் என்று எண்ணிவிட்டு ஈழநாடு பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதினார்கள்: அந்தக் கடிதத்தை ஈழநாட்டிற்குஅனுப்பிய பொழுது அதைத் தணிக்கை செய்துவிட்டார்கள்; இதனால் தான் இந்த விடயத்தை அண்மையில் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது இச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவர முயன்றேன். ஆனால் அந்தக் கடிதத்தை வாசிக்க நீங்கள் அன்றுஅனுமதிக்கவில்லை, வேறு ஒரு நேரம் இதைக் கவனிக்கலாம் என்று பிரதமரும் அப்பொழுது சொன்னார் இன்று அந்தக் கடிதத்தை இந்தக் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்,

திருவாளர்கள் ந. நடேசமூர்த்தி, மண்டை தீவு, மு. வே. மயில்வாகனம். அனலைதீவு, மு. சுவாமிநாதன், அல்லைப்பிட்டி, இ. நகுலேசபிள்ளை, சரவணை, பொ. பரராசசிங்கம் வேலணை, வி. தியாகராசா, கரம்பொன், க, முத்துத்தம்பி, புங்குடு தீவு. கு. மத்தியாஸ், நாரந்தனை, ம. ப. பொன்சின்: ஊர்காவற்றுறை ஆகியோர் தமது கடிதத்தில் என்ன எழுதினார்கள்,

பாராளுமன்ற உறுப்பினராகிய எனக்கு அவர்கள் தாம் ஈழநாடுபத்திரிகைக்கு எழுதிய கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்கள்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, அன்றைக்கு இந்தக் கடிதத்தை வாசிக்க நீங்கள் அனுமதி அளிக்கவில்லை; இன்றைக்கு அதை நான் இங்கு வாசிக்க வேண்டும்: யாழ்ப்பாண அரசாங்க அதிபர் இரண்டு கடிதங்களை ஆக்கி அங்கே வேலை செய்பவர்களிடம் கையெழுத்து வாங்கி ஈழநாட்டிற்கு அனுப்பி வைத்தார், மக்கள் கருத்து என்ற பகுதியில் வெளியிடச் சொல்லி அப்படி வெளியான கடிதங்களுக்குப் பதிலாகத்தான் நான் குறிப்பிட்ட ஒன்பது பேரும் ஒரு கடிதத்தை ஈழநாடு பத்திரிகைக்கு எழுதினார்கள். அக்கடிதத்தை நான் இப்பொழுது வாசிக்கிறேன்,

"ஆசிரியர். ஈழநாடு, யாழ்ப்பாணம்,

அன்புடையீர்.

மக்கள் கருத்து

ஊர்காவற்றுறைத் தொகுதி வாக்காளர்கள் தன் மானமுள்ளவர்கள் எட்டப்பர்களைத் தெரிவு செய்யமாட்டார்கள்.

திரு. யோகேந்திரா துரைசுவாமியின்அரசியல் சாணக்கியத்தையும் அதனால் அவர் தமக்குப் பெற்றுக்கொண்ட மாவட்ட அமைச்சின் செயலாளர், அரசாங்க அதிபர் பதவிகளையும் பற்றி உங்கள் பத்திரிகையில் சில கடிதங்களும் செய்திகளும் வெளிவந்துள. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கிளைகளின் தலைவர்களும். வாக்களிப்பு நிலையத்தில் திரு. யோகேந்திராவின் முகவராகக் கடமையாற்றியவர்களும் இக்கடிதங்களில் கையொப்பமிட்டுளர்.

1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் வாக்களிக்கப்பட்ட 27,673 வாக்குகளில் 279 வாக்குகளைப்பெற்ற திரு. யோகேந்திரா துரைசுவாமியின் மாபெருந் தோல்வியை மறைத்துமூடி அவரை மக்கள் மதிப்பைப்பெற்ற ஒருவராக ஆக்குவதற்கு அவருடைய தொண்டர்கள் முயல்வதை நாங்கள் குறைகூறவில்லை எனினும் இவர்கள் தங்களுடைய ஆர்வத்தால் அவருக்கும் ஊர்காவற்றுறை மக்களுக்கும் பேர் இழுக்கு உண்டாக்கும் முறையில் எழுதுவது மன்னிக்க முடியாத பாதகச் செயலாகும்

ஊர்காவற்றுறை, மக்கள் அவரைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிந்திருந்தால் அவர் மாவட்ட அமைச்சராகி இருப்பாரே என்று அவர்கள் அங்கலாய்ப்பது அருவருப்பைக்கொடுக்கின்றது: தமிழ் மக்கள் ஒன்றுபட்டு உரிமைகளுக்காகப்போராடும் நேரத்தில் மாற்றானை மண்டியிட்டு மந்திரி பதவி பெறுபவர்களை எட்டப்பர் கூட்டம் என்று தமிழ் மக்கள் கூறிவருகிறார்கள். யோகேந்திரா துரைசுவாமியை இந்தக் கூட்டத்துடன்சேர்ப்பது அவருக்குச் செய்யும் துரோகமாகும்: எட்டப்பர்களை ஊர்காவற்றுறை மக்கள் என்றும் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யமாட்டார்கள்.

திரு. யோகேந்திரா துரைசுவாமி இப்பொழுது தான் பொறுப்பான அரசாங்க அதிபர் பதவியைப் பெற்றுளார். அவசரப்பட்டு அவர் செய்யாததையெல்லாம் செய்துவிட்டார்என்று கூறி அவருக்குப் பழியைச் சேர்ப்பது எவ்வகையிலும் விரும்பத்தக்கதன்று. அவர் மாவட்டஅமைச்சரின் செயலாளராவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட முழங்காவில் குழாய்க்கிணற்றுத் திட்டம். இலங்கை —இந்திய நுண்ணலைத் தொடர்புத் திட்டம் முதலியவற்றை அவருடன் சேர்ந்து அவர் செயற்கரியதைச்செய்துவிட்டார் என்று எழுதுவது நகைப்புக்கிடமானது. யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து தெரிவு செய்து தொடங்கப்பட்ட மாதிரிக் கிராமத் திட்டம்தான் கன்பொல்லை மாதிரிக் கிராமத் திட்டம். முன்னையஅரசாங்க அதிபர்களும் இதனைவிரைவுபடுத்த முயன்றார்கள். எனவே, திரு. யோகேந்திரா

—4-ம் பக்கம் பார்க்க

# அரசியலமைப்பு விதிகளின்படி வடக்கு கிழக்கில் மட்டுமே தமிழ்-ஏனைய இடங்களில் சிங்களம்தான்!

## கொழும்பு மாவட்ட நீதிபதியின் தீர்ப்பு!

''அரசியல் அமைப்பு விதிகளின்படி, வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில் தமிழில் மனுவைத் தாக்கல் செய்ய முடியாது. இந்நீதிமன்றங்களில் சிங்களத்திலேயே மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும்''

இவ்வாறு கொழும்பு மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிபதி திரு. கே. விக்னராஜா தீர்ப்பு வழங்கியிருக்கிறார். வழக்கொன்றில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தமிழில் மனுவைத் தாக்கல் செய்யலாமா என்ற பிரச்சினை மீது நீதிபதி விக்னராஜா தமது தீர்ப்பை 19-10-79ல் வழங்கினார்.

இவ்வழக்கில் தமிழில் சமர்ப்பிக்கப்பட்ட பதில் மனுவை ஏற்க வேண்டும் என வாதாடிய திரு, எஸ். தியாகலிங்கம் கியூ, சி. அரசியல் சட்டம் அதற்கு இடமளிப்பதாக எடுத்துக் காட்டியிருந்தார்.

தமிழ் மனுவை நிராகரித்து தீர்ப்பளித்த நீதிபதி திரு. விக்னராஜா தமது தீர்ப்பில் பின்வருமாறு கூறியுள்ளார்.

''அரசியலமைப்பின் 24ம் சாத்து நீதி நிர்வாக மொழி பற்றிக் குறிப்பிட்டுள்ளது. அரசாங்க நிர்வாக மொழியாக சிங்கள மொழியே இருக்குமென அரசியல் அமைப்புச் சட்டத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

24 (2)ம் பிரிவு தேசிய மொழிகளில் ஒன்றில் எந்த ஒருநீதிமன்றத்திலும் மனுத் தாக்கல் செய்யலாம் என்பதை வற்புறுத்துகின்றது: வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழில் மனுவைத் தாக்கல் செய்யலாமென 25(1)ம் பிரிவு வற்புறுத்துகிறது. அதற்கு உட்பட்டே 25(2)ம்பிரிவு செயற்படுகின்றது.

குறிப்பிட்ட ஒரு நீதி நிர்வாகப் பகுதியில் எந்தத் தேசியமொழி பாவிக்கப்படுகிறதோ அந்தத்தேசிய மொழியில்தான் கருமங்கள் ஆற்றப்பட வேண்டும்.

''வடக்கு. கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில் தமிழில் மனுவைத் தாக்கல்செய்யலாம். ஆனால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் நிர்வாக மொழி சிங்களம். எனவே கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் மனுக்களும், பதில் மனுக்களும் சிங்கள மொழியிலேயே தாக்கல் செய்யப்பட வேண்டும். அதனால் தமிழில் உள்ள மனுவை நிராகரிக்கிறேன்''

இவ்வாறு நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

ஏற்கெனவே தமிழில் காசோலை கோரி இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமலாபநிதி அத்தியட்சகர் மீது திரு. ஆடியபாதன் தொடர்ந்த வழக்கிலும் தமிழில் காசோலை கோரும் உரிமை அவருக்குக்கிடையாதெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது தெரிந்ததே.

அரசியலமைப்பில் தமிழுக்கு சகல உரிமைகளும் வழங்கப்பட்டு விட்டதாகவும்; தமிழ் தேசிய மொழியாக்கப்பட்டுவிட்டதாகவும் நீதியமைச்சர் தேவநாயகமும், தொண்டமானும்இராசதுரையும் வாய்ப்பந்தல் போட்டு வந்தபோதிலும், ஒவ்வொன்ருக இப்போது உண்மைகள் அம்பலமாகி வருகின்றன-

## 'ஈழநாடு'

—3-ம் பக்கத் தொடர்

இதற்கு ஏதோ செய்தார் என்று கூறுவது அதற்காகப் பாடுபட்டவர்களைப் புறக்கணிப்பதாகும்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட வேலைகளையும் பிற அலுவல்களையும் விரைவாகச் செய்விப்பதற்காகத்தான் மாவட்ட அமைச்சரும் செயலாளரும் அரசாங்க அதிபரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சேவையைத் திறமையாகச் செய்வதற்காகத்தான் அரசாங்க அதிபருக்கு அதிகாரமும் சம்பளமும் கொடுக்கப்படுகின்றன. சீரழிந்து கிடக்கும் யாழ் கச்சேரி நிருவாகம் நேர்மையாகவும் விரைவாகவும் நடைபெறுமா என்பதுதான் இப்பொழுது எழுந்துள்ள கேள்வி. இதற்குக் கிடைக்கும் மறுமொழியே திரு. யோகேந்திராவின் சேவையின் அளவு கருவியாக அமையும்''.

### தணிக்கை

இந்தக் கடிதத்தை அவர்கள் அனுப்பி வைத்தார்கள். ஆனால், அவர் தணிக்கை செய்துவிட்டார். எனவே தலைவர் அவர்களே, இந்த முறையில் தான் இன்று அங்கு விடயங்கள் நடைபெறுகின்றன.

—1-ம் பக்கத் தொடர்

யும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்,

அமிர்: யாரோ ஒருவருடைய கடிதத்தை அல்லது போலியான ஒருகடிதத்தை வைத்துக்கொண்டு அமைச்சர் இம்மாதிரியாக இங்கு பேசுவது தவருனது இதுசம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கும் இருக்கிறது,

உப்சபாநாயகர்; அது அமைச்சருக்குத்தெரியுமோ என்று சந்தேகிக்கிறேன்.

அமிர்:அமைச்சர்யாரோ ஒருவருடைய கடிதத்தைவாசிக்கிருர் யாரையோ கொலை செய்வதற்கு திரு. தங்கத்துரை கந்தப்போடியைப் பயன்படுத்திஞர் என்றுகூறுவது அமைச்சரது பொறுப்பற்றதன்மையின் உச்சக்கட்டம் இம்மாதிரிப் பேசுவதை அவர் உடனேநிறுத்த வேண்டும்;

வி. தர்மலிங்கம். நாம் யாழ்ப்பாணத்திலுள்ள அவசரகால நிலையையே விவாதிக்கிருேம் கிழக்கு மாகாணத்தைப் பற்றியல்ல—

அமிர்: கல்குடாத் தொகுதி கிழக்கு மாகாணத்தில் இருப்பதுகூட அமைச்சருக்குத்தெரியாது உங்கள்நீதியமைச்சரிடமே கந்தப்போடியைப் பற்றிக் கேட்டுக் கொள்ளுங்கள் — எம்மைக் கேட்கவேண்டாம்.

மத்தியூ; 1972ம் ஆண்டிற்குப்பின் இடம்பெற்ற ஒவ்வொருகொலையும் அரசியல் கொலை என்பதே நான் கூற விரும்புவது.

அமிர்: 1977 ஆகஸ்டில் இடம்பெற்ற தமிழர்கள்படுகொலையும் அரசியல்படுகொலைகள் தாம் அவற்றுக்கு பின்னணியில்நீர்தான்இருந்தீர்.

மத்தியூ; தமிழர் விடுதலைக் கூட்டணியின் நோக்கமே இதன் அரசியல் பின்னணியாகும்;

ஓர் உறுப்பினர்: இதை நீங்கள்மறுக்கலாம்—ஆனால் மக்கள் தீர்மானிப்பார்கள்.

அமிர்; ஒருமுறையல்ல இருமுறையல்ல மும்முறை மக்கள் தீர்ப்பளித்து விட்டனர் மீண்டும் ஒருமுறை தீர்ப்பு வழங்கவும் அவர்கள் தயார்.

மத்தியூ: அவர்களை நீங்கள் பயமுறுத்தினுல் அவர்கள் தீர்ப்பளிப்பார்கள், உள்ளூராட்சித் தேர்தலில் நீங்கள் எப்படி வெற்றி பெற்நீரீகள் என்பது எமக்குத் தெரியும்.

எம். சிவா: உங்களது முழு இராணுவம் உங்களது முழு பொலீஸ்படை இவற்றின மத்தியிலும் நாம் சகல தேர்தல்களிலும் வெற்றி பெறுகிருேம்.

வீரசிங்கமல்லியாராய்ச்சி திருகோணமலையில் என்ன நடந்தது? நீங்கள் கள்ள வோட் போட்டீர்கள்.

அமிர்; தேர்தலில்தோல்வியடைந்த ஒவ்வொருவரும்வெற்றிபெற்றவர் கள்ள வாக்கினுல்தான் வென்றதாகக்கூறுவது வழக்கம்;

சிறில்மத்தியூ; ஒரு பயங்கரவாதி தற்கொலை செய்துகொண்டதும் தமிழர் விடுதலைக்கூட்டணியினர்அவருக்கு வீரருக்குரிய இறுதிமரியாதை செலுத்துகின்றனர்.

அமிர்: அவர் ஒரு பயங்கரவாதியல்ல!

மத்தியூ; கோப்பாய்கிராமிய வங்கிக்கொள்ளையில் அவரும் சந்தேகிக்கப் பட்டவர் வழக்குத் தொடுப்பதற்காக அவர் கைது செய்யப்பட்டபோது நஞ்சுகுடித்து இறந்துபோனுர்.

எம்.சிவா: பொலிசாரால் சித்திரவதை செய்யப்பட்ட காரணத்தினுல்தான் அவர் நஞ்சுகுடித்தார்

மத்தியூ:—இல்லை இல்லை;

அமிர்; உமக்குத் தெரியாது—எனக்குத் தெரியும்.

மத்தியூ; அவரால் ஒரு சத்தியக்கடதாசி தரப்பட்டுள்ளது.

அமிர்; யாரால்? அவரைக் கொலை செய்த பொலிஸ் அதிகாரியினுலா?

ஓர்உறுப்பினர்;— அவர் இறந்த பிறகா?

எம். சிவா; அவர் இறப்பதற்கு முன்பா? அவர் இறந்த பின்னராகத்தான் இருக்க வேண்டும் பொலிசாரால்இப்படிப்பட்டவிஷயங்களை சிருஷ்டிக்க முடியும்,

மத்தியூ: சிவகுமாரனின் மரணவீட்டு ஏற்பாடுகளை கூட்டணியினரே முன்னின்று செய்தனர்,சிவகுமாரன் மரணச்சடங்கில் திரு, அமிர்தலிங்கம் தம்பதிகள் உரையாற்றியபோது தமிழர்களின் இலட்சியத்துக்காக சிவகுமாரன் தன் உயிரை அர்ப்பணித்ததாக உரையாற்றினர்.

பயங்கரவாதத்துடன் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் வாலிபரைக் கூட அவர்விடுதலையானதும் கூட்டணித்தலைவர்கள்மாலை மரியாதையுடன் வரவேற்கின்றனர்.

எம்.சிவா: அவரைச் சந்தேகித்துவிட்டு பின்னர் எப்படி விடுதலை செய்தீர்கள்!

மத்தியூ; சாட்சியமளிக்க யாருமில்லை— அதனுல்வழக்கு இல்லை.

எம். சிவா; அவர்களிடமிருந்து ஒப்புதல்வாக்கு மூலம் பெற்றீர்கள் இப்படித்தான் வழக்குகளை நீங்கள் நிரூபிக்கப்பார்க்கிறீர்கள்;

மத்தியூ; திரு. சன்சோனியின் உயிருக்குக்கூடஅவர்கள் பயமுறுத்தல் விடுத்துள்ளனர்!

அமிர்; அதுவும் பொலிசாரின் தயாரிப்புத்தான் திரு. சன்சோனியின் உயிருக்கு பயமுறுத்தல்விடுத்து அனுப்பப்பட்ட கடிதம் பொலிசாரினுல் தயாரிக்கப்பட்டதுதான்,

மத்தியூ; அண்மையில் ஒரு வழக்கு நடந்தது அதில் அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்கின் ஜூரர்களின் வீட்டுக்குக்கூட கல்லெறிந்துள்ளனர்,

எம். சிவசிதம்பரம். இல்லை —அதுவும் ஒரு பொலிஸ்காரனின் வேலைதான் மேற்படி வழக்கு மீண்டும் எடுக்கப்படும்போது இதை நாம் நிரூபிப்போம். இதுவும் பொலிசாராலேயே செய்யப்பட்டது. அதை நிரூபிப்பதற்கு போதுமான சாட்சியங்கள் இப்போது எம்மிடம் உண்டு.

அமிர், தமக்கு எதிராக வழக்குப்போய்க் கொண்டிருப்பதையும் குற்றம்சாட்டப்பட்டுள்ளவர்கள்—மாவட்ட அமைச்சரின் மகன்உட்பட—விடுதலைசெய்யப்படப் போவதையும் உணர்ந்த பொலிசார் இந்தப்புதிய கதையை மேடையேற்றினர்.

எம். சிவா; அடுத்த விசாரணையின் போது இவையனைத்தும் அம்பலத்துக்கு வரும்;

(மீதி அடுத்த இதழில்)


## சுதந்திரன்

### [வாரமிருமுறை]

### வெளிநாடுகள் — சந்தா விபரம்

( இலங்கை நாணயப்படி )

| | | |
|---|---|---|
| இந்தியா | | |
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ரூபா 251.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, 125.50 |
| கடல் மார்க்கம் | (ஓராண்டு) | ,, 125.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, 62.50 |
| மலேசியா, சிங்கப்பூர், மத்தியகிழக்கு நாடுகள் | | |
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ரூபா 285.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, 142.50 |
| கடல் மார்க்கம் | (ஓராண்டு) | ,, 125.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, 62.50 |
| லண்டன், அவுஸ்திரேலியா | | |
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ,, 345.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, 172.50 |
| அமெரிக்கா | | |
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ,, 387.00 |
| ,, ,, | (அரையாண்டு | ,, 193.50 |

அனுப்பவேண்டிய முகவரி:
நிர்வாகி சுதந்திரன்,
15, மகாத்மாகாந்தி வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ம் திகதி புதன்கிழமைஅச்சிட்டு வெளியிடப்பட்டது,